# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 05 மே 2025 தனிப்பிரதி – ரூ.20/– ஆண்டு சந்தா ரூ.200/–

Vol : 11 Issue No : 05 May 2025 Single Copy – Rs.20/– Annual Subscription Rs.200/–



# உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்

யோவேல் 2:25

# பிறவியிலேயே வளைந்த கால்களை கர்த்தர் நேராக்கினார்!



என்னுடைய பேத்தியின் பெயர் எஸ்தர் இவாஞ்சலின் அமலி. அவள் குறை மாதத்தில் பிறந்தாள். பிறக்கும்பொழுதே அவளுடைய இரண்டு கால்களும் வளைந்த நிலையில் இருந்தது. காலை மடக்க முடியாது, விரிந்த நிலையில் இருக்கும். இதனால் நடக்க முடியாது. அதனால் பள்ளிக்கு செல்ல அதிக கஷ்டப்பட்டாள். இந்த சூழ்நிலையில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு பேத்தியை அழைத்து வந்தோம். Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என் பேத்திக்காக மனதுருக்கத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே மனமிரங்கினார். வளைந்த நிலையிலிருந்த பேத்தியின் கால் கொஞ்சம் கொஞ்சமாக நேராக துவங்கியது. அதன்பின் இயல்பு நிலைக்கு வந்தது. தற்பொழுது இன்ஜினியரிங் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். அற்புத சுகம் தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். பேத்திக்காக பாரத்துடன் ஜெபித்த ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

- திருமதி. டெய்சிபாய் சுகுணா, பட்டுக்கோட்டை

# வழக்கில் கர்த்தர் நீதி செய்தார்



நான் அன்பரின் ஊழிய பங்காளர், வேலை ஸ்தலத்தில் என் மேல் பொறாமை கொண்ட சிலர் பொய் குற்றம் சுமத்தி என் மேல் அநீதியான ஒரு வழக்கு போட்டார்கள். திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு வரும் பொழுதெல்லாம் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் வழக்கிலிருந்து விடுதலையாக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஒவ்வொரு முறையும் ஐயா எனக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். கர்த்தர் பெரிய அதிசயம் செய்தார். அந்த வழக்கில் நீதிபதியே தலையிட்டு இது பொய் வழக்கு என கூறி அந்த வழக்கிலிருந்து என்னை விடுதலை செய்தார். என் கண்ணீரைக் கண்ட கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

எனக்கு பக்கவாதம் ஏற்பட்டு படுத்த படுக்கையாகி சுயநினைவற்ற நிலையில் இருந்தேன். என் அக்கா உடனே ஐயா அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, எனக்காக ஜெபிக்கும்படி சொன்னார்கள். ஐயா ஜெபித்த அந்த நேரமே எனக்கு சுயநினைவு வந்தது. அதன்பின் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு என் குடும்பத்தினர் என்னை தூக்கிக் கொண்டு தான் வந்தார்கள். அப்பொழுதும் ஐயா, அம்மா குடும்பத்தினர் அனைவரும் பாரத்துடன் எனக்காக ஜெபித்து என்னை தைரியப்படுத்தி அனுப்பினார்கள். அதன்பின் நான் நடக்க ஆரம்பித்து மீண்டும் வேலைக்கு செல்ல கர்த்தர் பெலன் தந்தார். தற்பொழுது பட்டுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்திற்காக உழைக்க கர்த்தர் எனக்கு வாய்ப்பைத் தந்தார். கர்த்தருடைய நாமத்தை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எங்களுக்காக எப்பொழுதும் பாரத்துடன் ஜெபிக்கிற ஐயா மற்றும் ஐயா குடும்பத்தினருக்கு என்னுடைய நன்றியை கூறிக்கொள்கிறேன்.

- திரு. பாஸ்கரன், பட்டுக்கோட்டை.

dranandastira@mojindia.org

# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 11 ♦ மே 2025 ♦ இதழ் 5

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான சகோதர, சகோதரிகளே,



சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சொன்ன நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! இந்த மாத பத்திரிக்கை உங்கள் கைகளில் கிடைப்பதற்கு ஒத்தாசை செய்த கர்த்தரை மனமார ஸ்தோத்தரிக்கிறேன். தொடர்ந்து பத்திரிக்கையை வாசியுங்கள். இதில் வருகிற தேவ செய்திகள், சாட்சிகள் அனைத்தும் உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும்.

**அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: நக்கிக்குடித்த அந்த முந்நூறு பேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன்.** (நியாதி.7:7) ஆம். தேவன் தெரிந்துக்கொண்ட வெறும் முந்நூறு பேரைக் கொண்டு, கடற்கரை மணலைப்போலத் பெருந்திரளாயிருந்த எதிரிகளை இவர்கள் மேற்கொள்ளும்படி செய்தார். இந்த முந்நூறு பேர் எதிரியை எப்படி மேற்கொள்வார்கள் என்று கிதியோன் நினைத்திருக்கலாம். ஆனால் தேவனின் வழிகளும், நோக்கமும் வேறுபட்டு இருந்தது. ஆம், தேவன் தாமே உங்களுக்கு என குறித்து வைத்திருக்கிற வழிகள் சில நேரங்களில் உங்களுக்கு புரியாத புதிராக இருக்கலாம். கர்த்தர் உங்களை தெரிந்துக்கொண்டு, உங்கள் மூலமாக என்னென்ன காரியங்களை செய்யவேண்டும் என்று கர்த்தர் சித்தமாய் இருக்கிறாரோ அதை அப்படியே செய்து முடிப்பார். எனவே சோர்ந்து போகாதீர்கள். உங்கள் மூலமாக அநேகர் ஆசீர்வாதங்களை பெறும்படி கர்த்தர் கிருபை செய்வார்.

ஏப்ரல் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். பட்டுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஸ்பான்சர் செய்த அன்பு பங்காளர்களுக்கும், கள்ளக்

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627

Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி - 620 003.

Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

குறிச்சியில் நடைபெற்ற சிலுவை பெருவிழாவிற்கு ஸ்பான்சர் செய்த அன்பு மருத்துவர்களுக்கும், பாசமிகு பங்காளர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மே மாதம் சென்னை, நாகர்கோவில், கர்னூல், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் திருச்சியில் நடைபெற இருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். ஆத்துமாக்களை தேடி அவர்களுடைய இரட்சிப்பிற்காக நடத்தப்படுகிற இந்த கூட்டங்களில் பங்காளர்கள் அனைவரும் வந்து கலந்துக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் கூட்டத்திற்கு அழைத்து வாருங்கள்.

உங்கள் பிள்ளைகளின் தேர்வு முடிவுக்காக காத்திருப்பீர்கள். உங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் அனைவரும் எழுதியுள்ள தேர்வுகளில் கர்த்தர் தாமே மகத்தான வெற்றியைத் தந்து, அவர்களுடைய மேற்படிப்பிற்கான இடங்கள் கிடைப்பதற்கு ஒத்தாசை செய்து, தேவைகளை சந்திக்கும்படி நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம்.

எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள். அவர்களுக்கு இருக்கிற அனைத்து பெலவீனங்களும் நீங்கி ஊழியத்தை செய்வதற்கு தேவையான பெலனை கர்த்தர் தரும்படி ஜெபியுங்கள். எங்கள் மூவரையும் கர்த்தர் வரும்நாட்களில் இன்னும் வல்லமையாக எடுத்து பயன்படுத்த எங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

வாக்கு மாறாத கர்த்தர் உங்கள் அனைவரையும் தம் கண்மணியைப் போல பாதுகாத்து நடத்துவாராக!

கிறிஸ்துவின் பணியில்
Dr. ஜேன் ஜாஷ்வா
jane@mojindia.org




Malayalam Whats App No. +91 94889 32937



# திரும்ப அளிப்பேன்
## I will Restore

தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான பங்காளர்களுக்கும் பத்திரிக்கை வாசகர்களுக்கும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற இனிதான நாமத்தில் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதத்தில் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கிற வார்த்தை **யோவேல் 2:25 நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக் கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்.** இஸ்ரவேல் ஜனங்கள் அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்து வந்த விவசாயத்தின் பலனை அன்று வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும் பட்சித்துப் போட்டது. இந்த சூழலில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லப்பட்ட வார்த்தையாக இது இருக்கிறது.

நம்முடைய விவசாயத்தில் சில நேரங்களில் இக்கட்டான சூழல் ஏற்படுவதுண்டு. மழை பெய்யக் கூடாத காலக்கட்டத்தில் பெருமழை பெய்யும்பொழுது அறுவடைக்கு தயாராக இருக்கிற நெல்மணிகள் எல்லாம் தண்ணீரில் அடித்துக் கொண்டுபோகும் நிலை உண்டாகும். அப்பொழுது விவசாய மக்கள் அதிக வேதனைக்கு உள்ளாவார்கள். இதைப்போல இஸ்ரவேல் ஜனங்கள் செய்து வந்த விவசாயத்தில் நஷ்டத்தை கண்டபோது, **"வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சி களும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங் களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்"** என கர்த்தர் வாக்கு கொடுத்தார்.

**இன்றைக்கு உங்களுடைய பிரயாசம், முயற்சி, உழைப்பு அனைத்தையும் ஏதாவது ஒரு காரியங்கள் அழித்துப்போட்டு ஒன்றுமில்லாமல் செய்திருக்கலாம். அவ்வாறு நீங்கள் இழந்து போனவைகள் எல்லாவற்றையும் திரும்ப பெற்றுக்கொள்வீர்கள் என்பதையே மேற்கண்ட வசனத்தில் ஆண்டவர் சொல்லுகிறார்.**

யோவேல் தீர்க்கதரிசியின் புத்தகத்தில் உள்ள **உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்** என்ற வசனத்திற்கும், **லூக்கா 15:11-24-ல்** காணாமல் போன மகன் உவமையில் வருகிற இளைய குமாரனைக் குறித்த காரியங்களுக்கும் இங்கு ஒற்றுமை இருப்பதை நாம் அறிந்துக்கொள்ளலாம். இவை இரண்டையும் ஒப்பிட்டு நான் இங்கு கூற விரும்புகிறேன்.

**லூக்கா 15:11 முதல் 24** வரையுள்ள இந்த வசனங்களின் அடிப்படையில் இந்த செய்தியை உங்களுக்கு எழுதுகிறேன். இந்த பகுதியில் வாசிக்கிற உவமையானது, நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய வாயினால் சொன்ன ஒரு உவமை ஆகும். பல உவமைகள் வாயிலாக ஜனங்களுக்கு ராஜ்யத்தின் சுவிசேஷத்தை சொல்வதில் நம் ஆண்டவர் மிகவும் தேர்ச்சி பெற்றவர்.

**லூக்கா சுவிசேஷம் 15-ம்** அதிகாரத்தில் காணாமல் போன ஆடு,காணாமல் போன வெள்ளிக் காசு, காணாமல் போன ஒரு மகனைக்குறித்து இயேசு சொல்லியிருக்கிறார். நம்முடைய சிந்தனைக்கு காணாமல் போன மகனைக்குறித்து மட்டும் நாம் தெளிவாக பார்க்கப்போகிறோம்.

உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் என்று வாக்குக்கொடுத்தவர் நிச்சயமாக அதை நிறைவேற்றுவார் என்பதை காணாமல் போன மகன் உவமையின் வாயிலாக அறிய முடிகிறது. ஒரு தகப்பனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். அதில் இளைய மகன் தந்தையின் ஆஸ்தியில் தன்னுடைய பங்கை பெற்றுக்கொண்டு தூர தேசத்திற்கு சென்று, துன்மார்க்கமாய் வாழ்ந்து அனைத்தையும் செலவிட்டு, இறுதியில் சாப்பிடுவதற்கு கூடவழியில்லாமல் அனைத்தையும் இழந்த நிலையில் தந்தையிடம் திரும்பி வந்தபொழுது, அவன் இழந்த அனைத்தையும் திரும்ப பெற்றுக்கொண்டான் என்பதே அந்த உவமையின் பொருளாக இருக்கிறது. இளைய மகன் எதையெல்லாம் இழந்துப் போனான்?அவன் இழந்ததை திரும்ப பெற்றுக்கொள்வதற்கு என்ன செய்தான் என்பதையே இந்த மாத தியானத்திற்கு ஆண்டவர் தந்துள்ள செய்தியாக இருக்கிறது.

## இளைய குமாரன் எதையெல்லாம் இழந்துப்போனான்?

**சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லா வற்றையும் சேர்த்துக்கொண்டு, தூர தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். லூக்கா 15:13** இந்த வசனத்தின் அடிப்படையில் அவன் இரண்டு காரியங்களை இழந்து போனான். முதலாவதாக அவன் தகப்பனோடு இருந்தபொழுது நல்ல குணாதி சயங்களுடன் வாழ்ந்தான். தகப்பனை விட்டு தூர தேசம் போனப்பொழுது துன்மார்க்கமான ஜீவியத்திற்குள் சென்றுவிட்டான். அதனால் நல்ல பண்புகளை இழந்துப்போனான். நல்ல வாழ்க்கை முறையை இழந்துப்போனான். **இதை நம் பரம தகப்பனோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். பரம தகப்பனை விட்டு நாம் தூரமாய் போகும்பொழுது துன்மார்க்கத்திற்குள் சென்று விடுகிறோம். அதன்மூலம் நல்ல பண்புகளை இழந்து விடுகிறோம்.**

இரண்டாவதாக, மேற்கண்ட வசனத்தில் அவன் ஆஸ்தியை அழித்துப்போட்டான் என்பதை பார்க்கிறோம். அவனுடைய தந்தை பெரிய ஜமீன்தாராக அல்லது பெரிய செல்வந்தராக இருந்த காரணத்தினால் தான் எளிதாக தந்தையின் ஆஸ்தியில் தனக்குரிய பங்கை வாங்கிக்கொண்டு செல்கிறான். **தகப்பன் வீட்டில் கிடைத்த உண்மையான சந்தோஷத்தை வெறுத்து, உலகம் தரக்கூடிய சந்தோஷத்தை நாடி, நண்பர்களுடன் சேர்ந்து துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்து, இறுதியில் ஆஸ்தியை அழித்துப்போட்டான். அவனிடமிருந்த பணமெல்லாம் சட்டென்று குறைந்துப் போய்விட்டது. பணம் இல்லையென்று தெரிந்ததும் அனைத்து நண்பர்களும் அப்படியே விலகிவிட்டனர். அவன் தன் பொருளாதாரத்தை, தன் சொத்தை இழந்தான்.** அவன் செய்த பாவங்களை பட்டியல் போடவில்லை. ஆனால் பாவியான ஒரு நிலைக்கு வந்துவிட்டான் என்பதை அறிய முடிகிறது. **தேவ பிரசன்னத்தை விட்டு நாம் தூரமாய் போகும்பொழுது பாவ வாழ்க்கைக்குள் விழுந்துவிடுகிறோம்.**

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் பாவம் நுழைந்துவிட்டால், அது மிகவும் தீவிரமாய் செயல்பட்டு அடுத்தடுத்து பலவற்றை இழக்கும்படி செய்துவிடுகிறது. இன்றைக்கும் கூட ஒரு சிலர் சூதாட்டத்தின் மூலம் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு, அதில் போய் விழுந்து, தன் மாத வருமானம், தன் வங்கி டெபாசிட், சொத்து அனைத்தையும் இழந்துவிடுகிறார்கள். ஆம். எந்த தீய பழக்கமும் மனிதனுடைய வாழ்க்கையில் வரும் பொழுது அவனுடைய பொருளாதாரத்தை சொத்துக் களை எல்லாம் அப்படியே அழித்துவிடுகிறது. வீண் ஆடம்பரம், குடிபழக்கம், போதைபழக்கம், சூதாட்டம், வேசித்தனமான காரியங்கள் அனைத்தும் ஒருவனுடைய ஆஸ்தியை, பொருளாதாரத்தை

முற்றிலுமாக அழிக்கவே செய்கிறது. இளைய மகன் எல்லாவற்றையும் இழந்த காரணத்தினால்தான் அவன் குறைவுபடத் தொடங்கினான் என லூக்கா 15:14–ன் கடைசி வசனத்தில் பார்க்கிறோம்.

உங்களுடைய வாழ்க்கையில் பொருளாதார நெருக்கடிகள் வரும்பொழுது எதனால் வந்தது? எங்கு தவறு நடந்தது என யோசித்துப்பாருங்கள். **உங்களுடைய துன்மார்க்கமான செயல் ஒவ்வொன்றும் உங்கள் பொருளாதாரத்தை அழிக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.**

மூன்றாவதாக தன் தந்தையின் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்த விதவிதமான அறுசுவை உணவை, இராஜ உணவை அவன் இழந்தான். **அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்க வில்லை.** லூக்கா 15:16– இந்த வசனத்தில் பன்றிகள் தின்னும் தவிட்டினால் தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், பன்றிக்கு வைக்கிற ஆகாரத்தை கொடுக்ககூட யாரும் இல்லை என்ற பரிதாபமான நிலைக்கு இளைய மகன் வந்துவிட்டான். அவனுடைய தகப்பன் வீட்டிலிருந்த வேலைக்காரர்களே திருப்தி யாக சாப்பிட்டார்கள் என்றால் வீட்டின் இளைய மகனுக்கு இன்னும் அருமையான உணவை அல்லவா கொடுத்திருப்பார்கள். **அந்த உயர்தரமான நல்ல உணவை இழந்து நிற்கிறான். துன்மார்க்க மான வாழ்க்கையின் தொடர் விளைவை இங்கு அறிந்துக் கொள்ள முடிகிறது.**

நான்காவதாக அவன் நல்ல உடையை இழந்துவிட்டான். நம்முடைய வழக்கத்தில் ஆள்பாதி, ஆடைபாதி என்பார்கள். ஆம், ஒரு மனிதனுடைய வாழ்வில் அவன் உடுத்துகிற உடை அதிக முக்கியமான இடத்தை பெறுகிறது. அத்தகைய நல்ல உடையை இழந்த நிலையில் வந்ததால் தான், அவன் தந்தை அவனுக்கு உயர்ந்த வஸ்திரத்தைக் கொடுத்தார் என பார்க்கிறோம். ஆம், துன்மார்க்கமான ஜீவியம் அவனை தொடர்ந்து கீழான நிலைக்கு தள்ளிவிட்டது. அரச உடையை (Royal cloth) இழந்துவிட்டான். சாப்பாட்டுக்கே வழியில்லாத ஒருவன் அணிந்திருக்கும் கேவலமான உடையைதான் போட்டிருந்தான். **அவன் தந்தை வீட்டில் உடுத்தியிருந்த அந்த இராஜ உடையை இழந்துவிட்டான்.**

ஐந்தாவதாக அவன் சமாதானத்தை இழந்தான். மனித வாழ்க்கையில் சமாதானம் முக்கிய மான இடத்தை பெறுகிறது. சமாதானம் இல்லை யென்றால் ஒரு மனிதனால் நன்றாக சாப்பிட முடியாது, நன்றாக தூங்க முடியாது, யாவரோடும் சகஜமாக பேச முடியாது. தகப்பன் வீட்டில் எந்த கவலையும் இல்லாமல் வாழ்ந்த மகன், துன்மார்க்கமான வாழ்க்கையினால் மனநிம்மதியை, சமாதானத்தை இழந்து விட்டான். **துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லு கிறார்.** ஏசாயா 48:22

ஆறாவதாக அவனுடைய நல்ல மதிப்பு, மரியாதை அனைத்தையும் இழந்தான். தன் தகப்பன் வீட்டில் பெரிய ஜமீன்தாருடைய மகன் என்ற ஒரு பெரிய அந்தஸ்தில் வாழ்ந்தவனுக்கு இருந்த நல்ல மதிப்பு, மரியாதை, புகழ் மற்றும் அதிகாரம் அனைத் தையும் இழந்தான். He lost his fame, respect and power. தற்பொழுது பன்றி கூட்டத்தில் ஒருவனாக, பன்றியை மேய்க்கிறவனாக மாறிவிட்டான். முதல் சறுக்கல் அவனை முற்றிலும் சறுக்கலாக மாற்றி போட்டுவிட்டது.

ஏழாவதாக அவனுடைய சுய அடையாளத் தை (He lost his own identity) இழந்தான். அடையாளம் என்பது மிகவும் முக்கியமானது. துன்மார்க்கமான வாழ்க்கையினால் அதையும் இழந்துவிட்டான். துன்மார்க்கமான ஜீவியம் பரம தந்தையிடமிருந்து அவனை பிரித்து, பிசாசின் கூட்டத்துடன் சேர்த்துவிட்டது. பிசாசு அதிக தந்திரத் துடன் செயல்படுகிறவன். அவன் நம்முடைய அடையாளத்தை எடுத்துப்போடுவதில் மிகவும் தீவிரமாய் செயல்படுவான். ஏனென்றால் அவன் கூட்டத்திற்கு ஆள் சேர்ப்பதில் முனைந்து நிற்கிறவன்.

உங்களுடைய வாழ்க்கையில் ஒரு சில அடையாளங்களை நீங்கள் இழந்து இருக்கலாம். ஆவிக்குரிய அடையாளங்களை இழந்துப்போய் இருக்கலாம். ஆண்டவர் எதற்காக உங்களை சிருஷ்டித்தாரோ, எதற்காக உங்களை அழைத்தாரோ, எதற்காக உங்களை படைத்தாரோ, அதை இழந்து போய் நிற்கலாம். கலங்காதீர்கள். கர்த்தர் நீங்கள் இழந்ததை திரும்ப அளிப்பார். **நீங்கள் ஆண்டவருடைய பிள்ளை என்பதுதான் உங்களுடைய அடையாளம். உலக காரியத்துடன் நீங்கள் ஒத்துப்போனால் உங்களுடைய அடையாளத்தை நீங்கள் இழந்து விடுகிறீர்கள் என்பதை மறந்து போகாதீர்கள்.**

இன்றைக்கு உங்களுடைய குணாதிசயங்களை யோசித்துப்பாருங்கள். ஒரு வேளை உண்ண உணவும், உடுக்க உடையும் ஆண்டவர் உங்களுக்கு கொடுத்திருக்கலாம். ஆனால் உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு நிலையில் சமாதானம், சந்தோஷத்தை இழந்திருப்பீர்கள். அநேக நாட்கள் துக்க முகத்துடன் இருந்திருப்பீர்கள். ஒரு காலத்தில் மதிப்பு மரியாதையை பெற்ற நீங்கள் தற்பொழுது அதையும் இழந்திருக்கலாம். **ஆண்டவர் சொல்கிறார். திரும்ப உங்களுக்கு அளிப்பேன்.**

இளைய குமாரனுடைய வாழ்க்கையை பாருங்கள். அவனுடைய துன்மாக்கமான ஜீவியத்தின் தொடர் விளைவுகளை பார்க்கும்பொழுது ஆஸ்தியை இழந்தான், நல்ல குணநலன்களை இழந்தான், நல்ல உணவு, உடையை இழந்தான். மதிப்பு, மரியாதையை இழந்தான், சமாதானம், சந்தோஷத்தை இழந்தான், கடைசியில் சுய அடையாளத்தையும் இழந்தான். ஒரு பாவம் மனிதனுடைய வாழ்க்கையை அப்படியே தலைகீழாக புரட்டிப்போட்டு விடுகிறது.

ஒரு வேளை இன்றைக்கு நீங்கள் உங்களுடைய சுகத்தை இழந்து இருக்கலாம். உங்கள் வாழ்க்கையிலே ஏதோ ஒரு நல்ல காரியத்தை இழந்து இருக்கலாம். உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை பார்க்கும்பொழுது நீங்கள் எதையெல்லாம இழந்து போனீர்களோ அல்லது எவைகளால் இழக்கப்பட்டீர்களோ அதை குறித்துக்கொள்ளுங்கள். இளைய குமாரன் இழந்தையெல்லாம் ஒரு பட்டியல் போட்டு நாம் பார்த்தோம். அதேபோல உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதையெல்லாம் இழந்து போனீர்கள் என்பதை பட்டியல்போடுங்கள். அதன்பின் விசுவாசத்துடன் கேளுங்கள். **திரும்ப அளிப்பேன் என்ற ஆண்டவர் எனக்கு திரும்ப தருவார் என விசுவாசியுங்கள்.**

இளைய குமாரன் இழந்ததை திரும்ப பெற்றுக்கொள்வதற்கு அவன் என்ன செய்தான்? அவன் செய்த மூன்று காரியங்களைக் குறித்து தொடர்ந்து பார்க்கலாம்.

## இளைய குமாரன் தன் தவறை உணர்ந்தான்
## *(He realized his Mistake)*

**அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்.** லூக்கா 15:17

இளைய குமாரனுக்கு சாப்பிட தவிடுகூட கிடைக்காத நேரத்தில்தான் அவனுடைய புத்தி தெளிந்தது. அவனுக்குள் ஒரு உணர்வு வருகிறது, அப்பொழுது அவன் யோசிக்க தொடங்கினான். **"இத்தனை நாட்களாக பிசாசின் வலையில் இருந்த அந்த அவலமான நிலையை நினைத்து வருந்துகிறான்."** அவனுக்கு சாப்பிட எந்த உணவும் அல்லது பன்றி சாப்பிடுகிற அந்த தவிடும்கூட கிடைக்காத அந்த நேரத்தில்தான், தன் தந்தை வீட்டில் வாழ்ந்துக்கொண்டிருந்த நல்ல வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறான். இப்பொழுது புத்தி தெளிந்தவனாய் சுய நினைவுக்கு வருகிறான். (He came to himself)

உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் இழந்ததை திரும்ப பெறவேண்டுமானால் முதலில் உங்கள் புத்தி தெளியனும். நான் நல்ல புத்தியுடன் தானே இருக்கிறேன் என நீங்கள் நினைக்கலாம். ஆழமாக பாருங்கள். நீங்கள் சரிசெய்ய வேண்டியது என்ன என்பதை ஆண்டவர் உணர்த்துவார். ஒரு மனிதன் தேவனை விட்டு தூரமாய் போயிருக்கும் பொழுதும், அவன் வாழ்வில் எதிர்பாராத சில சறுக்கல்கள் ஏற்பட்டிருக்கும்பொழுது அவன் சிந்திக்க துவங்குகிறான், அவனுடைய புத்தி தெளிகிறது. அவன் புது நிலைக்கு வருகிறான்.

இந்த இளைய குமாரன் வாழ்க்கையில் ஒரு திரும்புமுனை வந்தது. இவன் வாழ்க்கையில் திருப்புமுனை வருவதற்கு காரணம் அவனுக்கு சாப்பாடு இல்லாத நிலை, பசியினால் வருந்திய நிலை என சொல்லலாம். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு விதத்தில் திருப்புமுனை வருவதுண்டு. இந்த திருப்புமுனை மிகவும் முக்கியமானது. சரியான நேரத்தில், சரியான சூழ்நிலையில் அதை பயன்படுத்திக் கொள்ளும்பொழுது வாழ்க்கை சிறப்பான முறையில் அமையும்.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் நன்றாக உடுத்தி, திருப்தியாக சாப்பிட்டுக் கொண்டு இருக்கலாம். ஆனால் வேறு ஏதாவது ஒரு காரியத்தில் நீங்கள் தொடர்ந்து குறைவுபட்டுக்கொண்டு இருக்க லாம். அது உங்களுடைய பொருளாதாரம், குடும்ப ஆசீர்வாதம், வேலை அல்லது நேரம் சம்பந்தப்பட்ட காரியமாக இருக்கலாம்,உங்களுடைய குடும்ப காரியம் அல்லது சுய ஒழுக்கம் சம்பந்தப்பட்ட ஒரு காரியமாக கூட இருக்கலாம். நீங்கள் அதை சரிசெய்ய வேண்டிய நிலையில் தற்பொழுது இருக்கிறீர்கள்.

ஒரு மனிதன் உணர்வு நிலைக்கு வரும்பொழுதுதான் அவன் உயர்வை நோக்கிய ஒரு நிலைக்கு வந்துவிட்டான் என்று அர்த்தம். அவன் யோசிக்க ஆரம்பிக்கும்பொழுது ஒரு புதிய பயணம் துவங்குகிறது, ஒரு புதிய பாதையை நோக்கி நகர்ந்து செல்கிறான். அப்பொழுது அவன் இழந்ததை ஆண்டவர் தருவார். உணர்வு ரொம்ப முக்கியம். **...என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன். சங்கீதம் 119:144-ல்** பார்க்கிறோம். புத்தி தெளிந்து உணர்வடைந்தவன் அதே நிலையில் இருக்கவில்லை. என்ன செய்தான் என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

## இளைய குமாரன் எடுத்த சரியான தீர்மானம்
## *(He took correct decision)*

**நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். லூக்கா 15:18.**

அவன் எடுத்த சரியான தீர்மானம் முக்கியமானது. புத்தி தெளிந்து, உணர்வடைந்த இளைய குமாரன் அதே நிலையில் அப்படியே உட்கார்ந்து இருக்கவில்லை. சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுத்தான். காலதாமதமாக எடுக்கிற சில தீர்மானங்கள் பிரயோஜனம் இல்லாமல் போய்விடும். இங்கு இளைய குமாரன் புத்தி தெளிந்த உடனே தீர்மானத்தை எடுத்தான். உணர்வு வந்தப் பொழுது அவன் தான் பாவி என்பதை உணர்ந்துக் கொண்டான். **'என் தந்தையோடு உள்ள உறவை விட்டு, தூர தேசத்திற்கு வந்து, துன்மார்க்க மாய் வாழ்ந்தது தவறு என அறிகிறான். நல்ல தீர்மானம் எடுப்பதற்கு புத்தி தெளிதல் அவசிய மாயிருக்கிறது.' எப்படியென்றால் தான் ஒரு பாவி என உணரும் பொழுதுதான் புத்தி தெளிகிறது.**

சில நேரங்களில் நாமும் கூட, **'இப்படி செய்து விட்டேனே, இப்படியாக பேசிவிட்டேனே, இந்த இடத்திற்கு போயிருக்கக்கூடாது'** என உணர்கிறோம் ஆனால் மீண்டும் அந்த இடத்திற்கு செல்கிறோம். மீண்டும் அதே காரியத்தை செய்கிறோம். நாம் சரியான தீர்மானத்தை எடுக்கும்பொழுது மாத்திரமே இவைகளையெல்லாம் தவிர்க்க முடியும்.

இளைய குமாரனுக்குள்ளே ஒரு குற்ற மனசாட்சி வந்தது. என் தகப்பனுக்கு வேதனையை

கொடுத்துவிட்டேன். ஆகவே என்னை உம் கூலியாட்களில் ஒருவனாக வைத்துக்கொள்ளும் என சொல்வேன் என்ற ஒரு தீர்மானத்திற்கு வந்து அனைத்தையும் உணர்ந்து சிந்தித்து பார்க்கிறான். குறிப்பாக பல தவறுகளை செய்த காரணத்தினால் **'இனி நான் அவருடைய மகனாக இருக்க தகுதியற்றவன்'** என்பதை உணர்ந்தான்.

உங்களுடைய வாழ்க்கையில் புது வருடத்தின் துவக்கத்தில் அல்லது உங்களுடைய பிறந்த நாளன்று சில நல்ல தீர்மானங்களை எடுக்கலாம். ஆனால் அது அப்படியே காற்றில் பறந்து போய்விடுகிறது. முயற்சித்து பலன் இல்லை என சோர்ந்துபோகாதீர்கள். தீர்மானம் எடுக்கும்பொழுதுதான் தடைகள் வரும். தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருங்கள். ஆண்டவர் வெற்றியை தருவார். நீங்கள் எடுக்கும் சில சரியான தீர்மானங்கள் உங்களை மேன்மை அடைய செய்யும்.

## இளைய குமாரன் தீர்மானத்தை செயல்படுத்தினான்
## (He implemented his decision)

**எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். லூக்கா 15:20**

அவன் செயலில் இறங்கியதுதான் அதிக முக்கியமானது. தீர்மானத்துடன் நிற்காமல் விரைவில் அதை நடைமுறைப்படுத்தினான். ஒரு நல்ல தீர்மானத்தை நடைமுறைபடுத்துவது வரைக்கும் பிசாசு போராடிக்கொண்டிருப்பான். நெருக்கடிகள், பல பிரச்சனைகள், பல கஷ்டங்கள் வந்துக் கொண்டிருக்கும். இளைய மகனுக்கு எந்த குழப்பமும் இல்லை. எழுந்து புறப்பட்டான், தகப்பனிடத்தில் வந்துவிட்டான். இளைய குமாரன் தன் வாழ்வில் இழந்தவற்றை திரும்ப பெற்றுக்கொள்வதற்கு இந்த மூன்று காரியங்களை செய்தான். **'உணர்ந்தான், தீர்மானித்தான், செயல்படுத்தினான்.'**

அன்புக்குரியவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் இத்தகைய அனுபவங்கள் ஊடாக நீங்கள் கடந்து செல்லும்பொழுது, உங்களுக்குள் உணர்வு வந்திருக்கலாம். நீங்கள் தீர்மானம் எடுத்திருக்கலாம். ஆனால் அந்த தீர்மானத்தை செயல்படுத்த முடியாமல் பல தடைகள் வரலாம். அத்தடைகளையெல்லாம் தாண்டி நீங்கள் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப் படுத்தும்போது மாத்திரமே, இழந்ததை திரும்ப பெற்றுக்கொள்ள முடியும்.

**நீங்கள் எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றும்பொழுது, உங்கள் வாழ்வில் ஒரு ஆசீர்வாதம் வரும். உணர்ந்ததோடு இருக்கக் கூடாது, தீர்மானித்ததோடு நிற்ககூடாது, அந்த தீர்மானத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். இளைய மகன் உணர்ந்தான், தீர்மானித்தான், செயல்பட்டான். அதன்பின் அனைத்து காரியங்களும் தானாகவே நடந்தது.** தகப்பன் வீட்டை நோக்கி அவன் வரும் பொழுது நடந்த காரியங்கள் அனைத்தும் ஆச்சரியமாக இருந்தது. **அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். லூக்கா 15:20** தன் அடையாளத்தை இழந்த நிலையில் வந்த மகனை அவன் தகப்பன் தூரத்தில் பார்த்தபொழுதே அவனை அறிந்துக்கொண்டான். தூரத்தில் வருவது தன்னுடைய மகன் என்கிற அடையாளத்தை கண்டுக்கொண்டதால், மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்தான். மாம்ச பிரகாரமான தகப்பன் தன் மகன் திரும்பி வந்தப்பொழுது இவ்வளவு அன்பு காட்டுகிறார் என்றால் உங்களை எப்பொழுதும் நேசித்துக் கொண்டிருக்கும் பரம தகப்பனின் மனதுருக்கம் எவ்வளவு பெரியதாகயிருக்கும்.

ஒருவேளை நீங்கள் பரம தகப்பனை விட்டு தூரமாய் போய் அவருடைய பிள்ளை என்ற அடையாளத்தை இழந்திருந்தால் உடனே அவரை நோக்கி திரும்பி வாருங்கள். நீங்கள் இழந்ததை மீண்டும் பெற்றுக்கொள்ள பரம தந்தையிடம் நல்ல ஐக்கியம் வேண்டும்.நல்ல உறவு வேண்டும். இந்த

இளைய குமாரன் அவன் என்ன தீர்மானம் எடுத்தானோ அதை அப்படியே செய்தான். **"உம்முடைய குமாரனென்று சொல்வதற்கு நான் பாத்திரன் அல்ல"** என்றான். அதேப்போல நீங்களும் ஆண்டவரின் பாதத்தில் விழுந்துவிடுங்கள். மனதில் சமாதானம் வரும்வரைக்கும் ஆண்டவரை விடக்கூடாது. நீங்கள் செய்ய வேண்டியதை செய்யுங்கள், நீங்கள் சொல்ல வேண்டியதை பரம தந்தையிடம் சொல்லுங்கள். மீண்டும் என்னை உம் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும் என ஜெபியுங்கள். நான் உங்களை வேதனைப்படுத்திவிட்டேன். உங்களை துக்கப்படுத்தி விட்டேன். என்னை மன்னியும் என கெஞ்சுங்கள். அப்பொழுது அவர் உங்கள் மேல் மனதுருகுவார். நீங்கள் இழந்த சமாதானத்தை, அடையாளத்தை மீண்டும் தருவார். **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதி.28:13** நம் பாவங்களை வாயினால் அறிக்கை யிடவேண்டும் என நம் ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

என் அன்பு தேவ பிள்ளைகளே, இளைய குமாரன் தன் பாவம் அனைத்தையும் அறிக்கை செய்தபிறகே இழந்தது அனைத்தையும் திரும்ப பெற முடிந்தது. அவன் எடுத்த மூன்று காரியங்களை செய்து காட்டினான். திரும்ப அளிப்பேன் என வாக்குக் கொடுத்தவர், அவன் இழந்ததையெல்லாம் திரும்ப பெற்றுக்கொள்ள அருள் கூர்ந்தார்.

## இளையகுமாரன் எதையெல்லாம் திரும்ப பெற்றுக்கொண்டான்? *(What was restored to him)*

அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: **நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள். லூக்கா 15:22-24** அவன் இழந்து போன நல்ல குணாதிசயங்கள், ஆஸ்தி, உணவு, உடை, சமாதானம், மதிப்பு, மரியாதை மற்றும் சுய அடையாளத்தை மற்றும் மகன் என்ற ஸ்தானத்தை திரும்ப பெற்றுக் கொள்கிறான். விருந்து சந்தோஷத்தின் அடையாளம் என பிரசங்கி சொல்கிறான். **உயர்ந்த வஸ்திரம் தரப்பட்டது, கைக்கு மோதிரம் மற்றும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் பெற்றுக் கொள்கிறான்.**

ஆவிக்குரிய அர்த்தத்தில் பார்க்கும்பொழுது, உயர்ந்த வஸ்திரம் இரட்சிப்பின் வஸ்திரத்தை குறிக்கிறது. மோதிரம் நாம் அவருடைய பிள்ளை என்ற ஒரு அதிகாரத்தை காட்டுகிறது. **யோவான் 1:12-ன் படி** அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். பாதரட்சை சுவிசேஷத்தை சுமந்து செல்வதற்கு ஆயத்தம் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் எவைகளையெல்லாம் இழந்து நிற்கிறீர்கள் என்று உங்களுக்குத்தான் தெரியும். நீங்கள் இழந்ததையெல்லாம் திரும்ப பெற்றுக் கொள்வதற்கு இளைய குமாரன் செய்ததைப்போல **முதலாவது உங்கள் தவறுகளை உணருங்கள். இரண்டாவது சரியான தீர்மானம் எடுங்கள். மூன்றாவது எடுத்த தீர்மானத்தை செயல்படுத்துங்கள். அப்பொழுது திரும்ப அளிப்பேன் என வாக்குக்கொடுத்த நம் ஆண்டவராகிய கர்த்தர் நீங்கள் இழந்துப்போன அனைத்தையும் உங்களுக்கு திரும்ப அளித்து உங்களை ஆசீர்வதிப்பார்.**

# We Are Hiring!!

PRAYER WARRIORS

Language Known

Tamil-Malayalam

Tamil- Telugu

ministryofjesushr@gmail.com

Male / Female || Christians Preferred



## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

NAMBIKKAI TELEVISION

வெள்ளி, சனி, ஞாயிறு

**8:30PM to 9:00PM**

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADHANA TV

வியாழன், வெள்ளி

**7:00PM to 7:30PM**

பெரம்பலூரில்

## அற்புதத்தின் மாலை

நாள் : மே 11

ஞாயிற்றுகிழமை

இடம் : TELC St. John Church,
No.11 சங்குபேட்டை கிருஷ்ணா தியேட்டர் எதிரில்,
வெங்கடவாசாபுரம், பெரம்பலூர் -621212

நேரம்: மாலை 5:00 மணி முதல்
இரவு 9:00 மணி வரை



தேவ செய்தியாளர்: **Dr. ஆனந்த ஸ்திரா**

தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922

# வங்கிக் கணக்குகளின் விபரம்



**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்

"இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்."



மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website) || Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 620018.

# பட்டுக்கோட்டையில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்





கடந்த மாதங்களில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஸ்பான்சர் செய்த அன்பு பங்காளர்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

பட்டுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்தை ஒழுங்குசெய்த AG Church தலைமை போதகர் Rev.Pr. ஜேக்கப் செல்வராஜ் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த கூட்டத்திற்கு ஸ்பான்சர் செய்த பங்காளர்கள்

Bro. பாஸ்கரன் குடும்பத்தினர், Bro. செல்வராஜ் குடும்பத்தினர்,

சாந்தா அம்மாவிற்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.



## நாங்குனேரி கூட்டத்தில் கலந்துக்கொண்ட மக்களில் ஒரு பகுதியினர்







**நற்செய்தி பெருவிழாக்கள் மற்றும் கூட்டங்களை தொடர்ந்து நடத்துவதற்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிற காணிக்கைகளை கொடுத்து கூட்டங்களை நடத்துவதற்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

### அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org
www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

# துதி அறிக்கை

## தீய வல்லமையிலிருந்து அற்புத விடுதலை!



என் பெயர் பரமேஸ்வரி கிருபா. 10 வருடங்களுக்கு முன்பு என்னுடைய சரீர பெலவீனத்தின் நிமித்தம் மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட்டேன். பல சிகிச்சைகள் எனக்கு தரப்பட்ட நிலையிலும் பயன் இல்லாமல் போனது. நான் மரித்து விடுவேன் என சொல்லிவிட்டார்கள். அதனால் மரண பயத்துடன் நான் வாழ்ந்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் என் கணவரும் ஒன்பது மாதங்களாக மஞ்சள் காமாலை நோயினால் அதிக கஷ்டப்பட்டார்கள். எங்களுடைய ஒரே மகனும் புத்தி பேதலித்த நிலையில் இருந்தான்.

இந்த இக்கட்டான நிலையில் எங்கள் அத்தை திருச்சி அன்பரின் ஊழியத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு எங்கள் அனைவரையும் அழைத்து வந்தார்கள். ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்தார்கள். எங்களை தொந்தரவு செய்த ஒரு சர்ப்பத்தின் ஆவியை கடிந்து ஜெபித்தார்கள். அந்த நேரத்தில் ஒரு மின்னல் போன்ற வல்லமை என் மேல் வந்தது. என்னுடைய சரீர பெலவீனம் நீங்கியது. குடும்பத்தினர் அனைவரும் விடுதலையடைந்தோம். அற்புதமாய் எங்களை விடுதலையாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம்.

– திருமதி. பரமேஸ்வரி கிருபா, மதுரை.

## திருமண தடை நீங்கியது! சுக பிரசவத்தில் குழந்தை பிறந்தது!



கடந்த வருடம் 2022–ம் ஆண்டு எனக்கு நன்கு அறிமுகமான ஒரு மகளை திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு அழைத்து வந்தேன். அந்த மகளுக்கு பல வருடங்களாக திருமண தடை இருந்தது. அந்த நாளில் கூட்டத்திற்கு வந்து ஜெபித்து சென்றார்கள். கர்த்தர் இரங்கி ஒரு வாரத்திலேயே நல்ல வரன் கிடைத்து திருமணம் நடைபெற உதவி செய்தார். இப்பொழுது ஒரு குழந்தை இருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கடந்த ஜனவரி மாதம் 16-ம் தேதி எங்கள் உறவினரின் மருமகளுக்கு பிரசவ நேரத்தில் இரத்தம் குறைவாக இருக்கிறது என சொல்லி உடனே அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்படி சொல்லி விட்டார்கள். நாங்களும் அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்து விட்டு, உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு மருமகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னோம். ஊழியர் பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் இரங்கி எந்த பிரச்சனையும் இல்லாமல் சுகபிரசவத்தில் குழந்தை பிறக்கும் படி அற்புதம் செய்தார். இரத்தம் கொடுக்க வந்தவர்களையும் வேண்டாம் என சொல்லி அனுப்பி விட்டார்கள். அந்த நாளில் தாயையும், சேயையும் அற்புதமாக பாதுகாத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

– திருமதி. உமா தேவகிருபை,

## தொழிலில் ஆசீர்வாதம்



2016-ம் ஆண்டு நான் செய்துக்கொண்டிருந்த ஒரு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு பல லட்சம் ரூபாய் கடனில் சிக்கிக் கொண்டேன். அப்பொழுது திருநெல்வேலி செல்வி மஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். தனிஜெப நேரத்தில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்துவிட்டு, "கர்த்தர் உன் கடனை நீக்கி, பெரிய ஜாதியாக்குவார்" என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். அதன் படியே கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார். தற்பொழுது இசைக்கருவிகள் விற்கிற ஷோரூம் வைத்து நடத்தும்படி கர்த்தர் என்னை உயர்த்தியுள்ளார். தேவனுக்கே மகிமை!

– திரு. ஏர்னஸ்ட், விஸ்வநாதபுரம்.

## பணிமாறுதல் கிடைத்தது!



என் பெயர் ஷீபா. விருதுநகரில் வசிக்கிறோம். நாங்கள் பல வருடங்களாக அன்பரின் ஊழிய பங்காளராக இருந்து வருகிறோம். நான் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி அரசு பள்ளியில் 15 வருடங்களாக ஆசிரியராக பணி செய்து வருகிறேன். சொந்த ஊருக்கு டிரான்ஸ்பர் கிடைக்காமல் அதிக கஷ்டப்பட்டேன். அதற்காக Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் ஐயா குடும்பத்தினர் அனைவரும் ஜெபித்தார்கள். கடந்த வருடம் ஐயா அவர்கள் கூறியது, "விரைவில் அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைத்து எனக்கு டிரான்ஸ்பர் கிடைக்கும்" என சொல்லி அனுப்பினார்கள். அதன்படியே இந்த வருடம் மார்ச் மாதம் எனக்கு டிரான்ஸ்பர் கிடைத்துள்ளது. கர்த்தருக்கு கோடாகோடி ஸ்தோத்திரங்களை செலுத்துகிறேன். ஐயா மற்றும்

குடும்பத்தினர் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– திருமதி. ஷீபா, விருதுநகர்.

## அற்புதமாக வீட்டை கட்டி முடித்தோம்!



நாங்கள் வீடு கட்ட ஆரம்பித்த நாளிலிருந்து அருகில் உள்ளவர்கள் எங்களுக்கு அதிக பிரச்சனைகள் தந்து என்மேல் பொய் வழக்கு போட்டு ஐந்து வருடமாக வீட்டை கட்ட முடியாத படி செய்து விட்டார்கள். நான் திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்து, என்னுடைய பிரச்சனையை Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்து விட்டு, "வழக்கில் நீ தான் வெற்றி பெறுவாய். வீட்டை கட்டி முடிப்பாய் என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள்." எதிர் தரப்பில் 3 வழக்கறிஞர்கள் இருந்தார்கள். எங்கள் தரப்பில் ஒரு வழக்கறிஞர் மட்டும் தான் இருந்தார். அந்த சூழலில் கர்த்தரே நடுவராக இருந்து செயல் பட்டார். எங்கள் வழக்கறிஞரே ஆச்சரியப்படும் வகையில் அந்த வழக்கில் கர்த்தர் எங்களுக்கு வெற்றியை தந்தார். வீட்டையும் நேர்த்தியாக கட்டி முடிக்கக் கர்த்தர் ஒத்தாசை செய்தார். தேவனுக்கே மகிமை! ஐயா மற்றும் ஐயா குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்திற்காக நன்றி கூறுகிறேன்.

– திருமதி. எலிசபெத், திருச்சி.

## சுய நினைவு திரும்பியது!



என்னுடைய நண்பர் பெயர் தினேஷ். நண்பரின் குடும்பம் பில்லி சூனியத்தினால் பாதிப்பட்டிருந்தது. திடீரென ஒருநாள் என் நண்பர் சுய நினைவை இழந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பல சிகிச்சைகள் அளித்தும் பயன் இன்றி, தொடர்ந்து சுய நினைவை இழந்த நிலையில் தான் இருந்தார். அவரைப் பார்க்க சென்ற நாங்கள் உடனே அன்பரின் ஊழியத்திற்கு வாட்ஸ் அப் வாயிலாக செய்தியை அறிவித்து நண்பருக்காக ஜெபிக்கும்படி சொன்னோம். அன்பரின் ஊழியத்திலிருந்து எனக்கு வந்த வாட்ஸ் அப் பதிலில், "மரித்து நான்காம் நாள் உயிருடன் வந்த லாசருவைப்போல உங்கள் நண்பரும் சுய நினைவை பெறுவார்" என்று செய்தி அனுப்பியிருந்தார்கள். அதேப்போல என் நண்பருடைய சுய நினைவு திரும்பியது. படுக்கையிலிருந்து எழுந்து அவர் நடக்க ஆரம்பித்தார். தற்பொழுது வேலைக்கு சென்றுக் கொண்டிருக்கிறார். அற்புதம் செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம். அன்பரின் ஊழியத்திற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம். – திரு. மோசஸ், மதுரை.

## மாவட்ட அளவில் விருதும், தங்கப்பதக்கமும் பெற்றேன்!

சென்னையில் நடைபெற்ற குடும்ப ஆசீர் வாதக் கூட்டத்திற்கு நாங்கள் குடும்பமாக வந்து கலந்துக் கொண்டோம். தனி ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக



ஜெபித்துவிட்டு தீர்க்க தரிசனமாக, "நீ Gold Medal வாங்குவாய்" என சொன்னார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் படிப்பில் 70 முதல் 80 சதவீதமே எடுப்பேன். ஆகவே அங்கிள் சொன்னதை மனதில் வைத்து நானும் ஜெபித்தேன். அதன்பின் மாவட்ட அளவில் நடைபெற்ற பொது அறிவிற்கான போட்டியில் நான் கலந்துக் கொண்டேன். அதில் நான் வெற்றி பெற்று மாவட்ட அளவில் விருதும், தங்கப்பதக்கமும் வாங்குவதற்கு கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எனக்காக ஜெபித்த அங்கிள் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

– ஸ்ரீமதி, சென்னை.

## தடை நீங்கி இடம் விற்கப்பட்டது!

எங்களுடைய சொந்த இடத்தை விற்பதற்காக நாங்கள் பல முயற்சிகள் செய்தோம். விற்க முடியாதபடி அதிக தடையாகவே இருந்தது. அப்பொழுது அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் வாயிலாக தொடர்புக் கொண்டு அந்த பிரச் சனைக்காக ஜெபிக் கும் படி எழுதியிருந்தேன். கர்த்தர் கிருபையாக



இரங்கினார். விரைவில் அந்த இடத்தை விற்பதற்கும். எதிர்பாராத நேரத்தில் முப்பது இலட்சத்திற்கு புதிய வீடு கட்டுவதற்கும் கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

– திருமதி. கிரேஸ்குமாரி, கோயம்புத்தூர்.

## மூன்று பவுன் நகை திரும்ப கிடைத்தது!

நான் ஒரு நபரிடம் மூன்று பவுன் நகையை கொடுத்திருந்தேன். ஒன்றரை வருடங்கள் ஆகியும் நகையை திரும்ப என்னிடம் கொடுக்காமல் அவர்கள் காலம் தாழ்த்திக்கொண்டே இருந் தார்கள். அதனால் அதிக வேதனையுடன் இருந்தேன். நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது என்னுடைய நகை திரும்ப கிடைக்க வேண்டும் என ஜெப விண்ணப்பத்தில் எழுதிக்கொடுத்து வந்தேன். ஒரு சில நாட்களில் அந்த நகை திரும்ப என்னிடம் கிடைப்பதற்கு கர்த்தர் தாமே அற்புதமாக உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

– Sis. சரோஜா, ஆசாரிபள்ளம்.

# 2025 மே மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 கன்மலையைத் திறந்தார், தண்ணீர்கள் புறப்பட்டு, வறண்ட வெளிகளில் ஆறாய் ஓடிற்று. (சங்.105:41)

02 அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களைக் குணமாக்குவேன்; ... திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன். (ஏசா.57:18)

03 உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்பு கூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார். (உபா.23:5)

04 நான் உங்கள் அக்கிரமங்களையெல்லாம் நீக்கி, உங்களைச் சுத்தமாக்கும் காலத்திலே பட்டணங்களில் குடியேற்றுவிப்பேன்; அவாந்தரமான ஸ்தலங்களும் கட்டப்படும். (எசே.36:33)

05 ... வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். (ஏசா.35:6)

06 இன்னும் என் பட்டணங்கள் நன்மையினால் பரம்பியிருக்கும்; (சகரி.1:17)

07 ... திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரமும் கனிகொடுக்கவில்லையே; நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன். (ஆகாய் 2:19)

08 அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும்,... இருப்பார். (ஏசா.32:2)

09 உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். (யோவான் 16:20)

10 மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டு வந்து விட்டீர். (சங்.66:12)

11 கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும். (ஏசா.35:10)

12 இன்னும் கர்த்தர் சீயோனைத் தேற்றரவு பண்ணுவார். (சகரி.1:17)

13 தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவ நதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர். (சங்.65:9)

14 கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். (நீதி.28:25)

15 களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும். (யோவேல் 2:24)

16 நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன். (சகரி.9:12)

17 இன்னும் கொஞ்சக் காலத்திலல்லவோ லீபனோன் செழிப்பான வயல் வெளியாக மாறும்; செழிப்பான வயல் வெளி காடாக எண்ணப்படும். (ஏசா.29:17)

18 அப்படியே அதின் வேர் திரளான தண்ணீர்களருகே இருந்ததினால் அதுதன் செழிப்பினாலும் தன் கொப்புகளின் நீளத்தினாலும் அலங்காரமாயிருந்தது. (எசே.31:7)

19 மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது; பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது, அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது. (சங்.65:13)

20 தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன். (ஏசா.44:3)

21 இன்னும் எருசலேமைத் தெரிந்து கொள்ளுவார்.... (சகரி.1:17)

22 உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும். (ஏசா.61:7)

23 கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். (யோபு 42:12)

24 வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. (சங்.65:11)

25 வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளிகளித்து, புஷ்பத்தைப் போலச் செழிக்கும். (ஏசா.35:1)

26 கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். (சங்.126:5)

27 ... விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார். (எபி.11:40)

28 என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு. (சங்.116:7)

29 சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். (ஏசா.35:10)

30 அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டுபோகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான். (சங்.126:6)

31 யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார். (யோபு 42:10)

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 25:40)

**Dr.ஆனந்த ஸ்திரா அவர்களின் 72-வது பிறந்தநாளை முன்னிட்டு S.J. Saves Trust – ல் உள்ள ஏழை எளிய மாணவர்கள், விதவைப்பெண்கள் மற்றும் வயதானவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள்**







1. கடந்த மார்ச் மாதம் 30-ம் தேதியன்று Dr.ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு S.J.Saves Trust டியூஷன் சென்டரில் படிக்கிற 300 ஏழை எளிய, மாணவ, மாணவியர்களுக்கு கேக், சிக்கன் கறிசாப்பாடு, ஸ்வீட் வகைகள், வடை, பாயாசத்துடன் சிறப்பான விருந்து அளிக்கப்பட்டது.
2. பிள்ளைகளுக்கு ஐயா பல அறிவுரைகளை வழங்கினார்கள். அத்துடன் அவர்கள் நல்வாழ்விற்கு தேவையான நல்லொழுக்கங்களையும் கற்றுக் கொடுத்தார்கள்.
3. பிள்ளைகளுக்கு தேர்விற்கு தேவையான பேனா,பென்சில், ஸ்கேல், பரீட்சைஅட்டை ஆகியவை S. J. SAVES TRUST மூலமாக வழங்கப்பட்டது. அத்துடன் டிபன்பாக்ஸ், சத்துமாவு மற்றும் மருந்து பொருட்களும் கொடுக்கப்பட்டது.
4. பிள்ளைகள் அனைவரும் ஐயா அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்து நன்றி கூறி சென்றார்கள்.
5. வயதான தாய்மார்கள் மற்றும் விதவைப்பெண்கள் 70 பேருக்கு புடவை, டிபன்பாக்ஸ், கேக், இனிப்பு, கார வகைகள் மற்றும் சிறப்பான விருந்து அளிக்கப்பட்டது.

## திக்கற்றபிள்ளைகளையும் விதவைகளையும்

படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்,..... பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

(யாக்கோபு 1:27)



என் பெயர் சில்வியா. சொந்த ஊர் திருநெல்வேலி. என்னுடைய மூன்றாவது வயதில் என் அம்மா தற்கொலை செய்து மரித்துவிட்டார்கள். அப்பொழுது இரண்டு வயதில் ஒரு தங்கை எனக்கு இருந்தாள். அம்மாவின் இறப்பிற்கு பிறகு 10 வயது வரை எங்களுடைய தாத்தா, பாட்டி தான் எங்களை வளர்த்தார்கள். அதன்பின் அவர்களும் மரித்துவிட்டார்கள்.அதன்பின் 2003-ம் ஆண்டு எங்களுடைய அப்பா, சித்தப்பா இருவரும் சேர்ந்து Dr. ஆனந்த ஸ்திரா ஐயா அவர்களை நேரில் சந்தித்து எங்களை வளர்க்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அதன்பின் S. J. Saves Trust விடுதியில் சேர்ந்து நானும் என் தங்கையும் வளர்ந்து வந்தோம். ஐயா, அம்மா இருவரும் எங்களையும், விடுதியில் உள்ள அனைவரையும் சொந்த பிள்ளைகளைப் போலவே நேசித்து வளர்த்தார்கள். அங்கு வேத வசனங்களை எங்களுக்கு சொல்லிக் கொடுத்தார்கள். அதனால் எங்களுடைய வாலிபவயதில் நாங்கள் பரிசுத்தமாய் வாழ முடிந்தது. அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

தற்பொழுது நான் பி.எட் முடித்து ஆசிரியராக பணி செய்கிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். என் கணவர் Physical Director ஆக இருக்கிறார். ஆதரவற்ற நிலையிலிருந்த எங்களுக்கு இரங்கி, எங்களை நேசித்து வளர்த்த ஐயா, அம்மா இருவருக்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் Mrs. சில்வியா, சென்னை





**S. J. Saves Trust - ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

Bank A/C. Name : S J SAVES TRUST
Account No : 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy.
IFSC Code : TMBL 0000019
A/C Type: Current

# உலக செய்திகள்

## முருங்கை கீரையின் பயன்



முருங்கை கீரையில், இரும்பு, சுண்ணாம்பு சத்துக்கள் அதிகம் உள்ளன. இதை வேக வைத்து சாறை குடித்து வந்தால், உடல் சூடு தணியும். வெப்பத்தால் ஏற்படும் மலச்சிக்கல் நீங்கும். முருங்கை கீரை காம்புகளை நீக்கி, மிளகு ரசம் தயாரித்து உணவுடன் உண்டு வந்தால், கை, கால், உடல் வலிநீங்கும். நெய்யில் வதக்கி சாப்பிட்டால், ரத்த சோகை தீரும். முடி நீண்டு வளரும், நரை குறையும் தோல் வியாதிகள் நீங்கும். பெண்களுக்கு கர்ப்பபை குறைபாடுகளை போக்கி, கருத்தரிப்பை ஊக்குவிக்கும். தாய்ப்பால் சுரப்பை அதிகப்படுத்தும். ஆஸ்துமா, மார்புச்சளி, சுவாசக் கோளாறுகளுக்கு முருங்கைக்கீரை சூப் நிவாரணம் தரும்.

## செயற்கை துளை ரேடார்

விண்வெளி நிறுவனமான நாசா மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இணைந்து பூமியின் மேற்பரப்பு மாற்றங்களை கண்காணிப்பதற்காக, நாசா–இஸ்ரோ செயற்கை துளைரேடார் (நிசார்) என்ற செயற்கைக் கோளை தயாரித்துள்ளனர். இது அதி நவீன பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளாகும். இதன் மூலம் பூமியின் சுற்றுச்சுழல் அமைப்புகள், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாற்றங்கள், வளமேலாண்மை மற்றும் இயற்கைபேரழிவுகள் குறித்த முக்கியமான நுண்ணறிவு தகவல்களையும் வழங்கும்.



இதனை கடந்த 2023–ம் ஆண்டு துவக்கத்தில் விண்ணில் ஏவதிட்டமிடப்பட்டது. ஆனால் அப்போது நிசார் செயற்கைக்கோளில் உள்ள பூமி மற்றும் ரேடார் ஆண்டெனா பிரதிபலிப்பானைப் பயன் படுத்துவதற்கு சாதகமான நிலை இல்லாத "கிரகணப் பருவம்" காரணமாக ஏவுதலில் தாமதம் ஏற்பட்டது.

சில தொழில் நுட்ப சிக்கல்கள் காரணமாக 2025–ம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதத்தில் விண்வெளியில் ஏவுவதற்கு தள்ளிவைக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது இந்தியா – அமெரிக்கா கூட்டு ஏவுதல் மீண்டும் இந்த ஆண்டு இறுதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஏவப்படும் சாத்தியமான தேதி குறித்தும் நாசா மற்றும் இஸ்ரோ விஞ்ஞானிகள் மறு பரிசீலனை செய்து வருகின்றனர்.

## கர்னூலில் Miraculous Family Blessing Meeting

நாள் : மே 3 சனிக்கிழமை

நேரம் : மாலை 6:00 மணிமுதல்
இரவு 10:00 மணிவரை



இடம்: Tanishq Function Hall,
Kappal Nagar, Road No.1
Venkataramana Colony,
Kurnool.

தேவ செய்தியாளர்

**Dr. ஆனந்த ஸ்திரா**

தொடர்புக்கு
9944536343, 9488845627

Local Contact
Pr. ShalemRaju, Cell:9014555955

**Telugu Whats App No. + 91 91770 87860**

## திருச்சியில் அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

மே
31
சனிக்கிழமை

இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி-18

நேரம் : காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை

தேவ செய்தியாளர்கள்

**Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

தொடர்புக்கு
செல் : 9488845627,0431-2741922

(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

திருச்சியில் கடைசி சனிக்கிழமையன்று நடைபெறும் குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில்
பிசாசின் பிடியில் உள்ளவர்களுக்காக, தீராத வியாதி உள்ளவர்களுக்காக
மற்றும் பல வேதனைகளால் கஷ்டப்படுகிறவர்களுக்காக ஜெபிக்கப்படும்.

**Tamil Whats App No. + 91 95004 87059**

# We Are Hiring!!

ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Skills Required : Tally ERP 9

**Male / Female || Christians Preferred**

ministryofjesushr@gmail.com



## அனுதின அற்புதம்



தினமும் காலை 5 மணி

DAILY MIRACLE

**MINISTRY OF JESUS**

இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக் காணலாம்.



**CAMERA MAN / VIDEO EDITORS**
**GRAPHIC DESIGNER**

(Any UG/PG Candidates)

Skills Required :Able to work in Adobe Photoshop, Adobe Illustrator, CorelDraw, Adobe Premiere Pro & After Effects

**Male / Female, Christians Preferred**

**Apply to: ministryofjesushr@gmail.com**

# APOSTOLIC & PROPHETIC POWER TRAINING

## அப்போஸ்தல தீர்க்கதரிசன வல்லமை முகாம்



**நாள்**
**மே 15, 16, 17**
**( வியாழன் வெள்ளி சனி )**

**நேரம் : 9:30 AM TO 5:30PM**

**இடம்**
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி-18

**தேவ செய்தியாளர்கள்: Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

### கற்பிக்கப்படும் பாடங்கள்

- தேவனோடு உறவாடுதல், ஆவியின் கனிகள்
- அக்கினி அபிஷேகம், ஒன்பது வரங்கள்
- வேதத்தை புரிந்துகொள்வது, தியானிப்பது, பிரசங்கிப்பது
- அந்தகார வல்லமைகளை எப்படி மேற்கொள்வது!
- திரியேக தேவனின் மகிமை, மாட்சிமை, குணாதிசயங்கள்
- பரலோகம், நரகம், பாதாளம், உலக முடிவு, நியாயத்தீர்ப்பு, நித்தியம்

### பயன்கள் - பலன்கள்

- ஜெப வாழ்வில் மாற்றம்
- மறுரூபப்பட்ட அனுபவம்

### சிறப்பம்சம்

- தெளிவான வேத விளக்கங்கள் அனுபவங்களோடு

குறிப்பு: அன்பரின் ஊழியத்துடன் இணைந்து ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் மற்றும் இந்த கடைசி நாட்களில் கர்த்தருக்காக வல்லமையோடு ஊழியம்செய்ய விரும்புகிறவர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**தொடர்புக்கு : 94888 45627**

**காணிக்கை : ரூ.2,000/- அதற்குமேல் ஊழிய காணிக்கை உங்கள் விருப்பம்போல்**

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி**

அபிஷேகம் நிறைந்த பாடல்கள், அனல் மூட்டும் தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக
இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.



Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

## நாகர்கோவிலில்

01 மே
வியாழக்கிழமை

### அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

SGS டிலைட் ஹால்,
பெதஸ்தா காம்ப்ளக்ஸ் மற்றும்
விஜயதா ஹோட்டல் அருகில்
WCC ரோடு, நாகர்கோவில்



தேவ செய்தி மற்றும் ஜெபம்: **Dr. ஆனந்த ஸ்திரா & Mrs. மார்கிரேட் ஸ்திரா**

01 மே
வியாழக்கிழமை



## சென்னையில்

### உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

காலை 9:00 மணி முதல் மதியம் 1:00 வரை

அன்னை அருள் திருமண மாளிகை,
வேளச்சேரி ரோடு, கிழக்கு தாம்பரம்,
சேலையூர், CSI St. மாற்கு சர்ச் எதிரில்,
கேம்ப் ரோடு பேருந்து நிறுத்தம், சென்னை–73

தேவ செய்தி மற்றும் ஜெபம்: **Rev.Dr.A. ஜாஷ்வா & குடும்பத்தினர்**

## விழுப்புரத்தில்

மே
10
சனிக்கிழமை

### அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

காலை 9:00 மணி முதல் மதியம் 1:00 வரை

ஸிபேசர் அசெம்பிளிஸ் ஆஃப் காட்
Ebenezer A.G. Church
No. 33 மூவேந்தர் நகர், சோலை மஹால் வழி
திருச்சி மெயின் ரோடு, விழுப்புரம் – 605 602



தேவ செய்தி மற்றும் ஜெபம்
**Dr. ஆனந்த ஸ்திரா**

தொடர்புக்கு : 94888 45627

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,